# யாழ்ப்பாண கல்லூரி  நூலகம் - நிறுவன ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை  மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org  வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

ஆசியாவின் முதலாவது பாடசாலை நூலகமாகக் கருதப்படும் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம், இன்றைய வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டதாகும். Undergraduate Library என பரவலாக அறியப்பட்டிருந்த இக் கல்லூரி நூலகமானது 1958 ஆம் ஆண்டில் 25000 நூல்களுடன் காணப்பட்டதாக அறியமுடிகின்றது. சிறிய அறையில் காணப்பட்ட நூலகம் படிப்படியாக விரிவடைந்து, கல்லூரியின் கேர்ணல் ஒல்கொட் ஞாபகார்த்த கட்டடத்தினை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளும் அளவிற்கு விரிவடைந்து சென்றது. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஜோன் பிக்னெல் அவர்களின் காலம் நூலகத்தின் பொற்காலமாகும். இவர் தனது அரிய நூற்சேகரிப்பை நூலகத்திற்கு வழங்கியதுடன் பல்வேறு அறிஞர்களின் தனிப்பட்ட சேகரிப்புகளையும் நூலகத்திற்குப் பெற்றுக்கொடுப்பதில் முன்நின்று உழைத்தார்.

பின்னாளில் 1974இல் யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தின் நுழைவாயிலையொட்டி நவீன நூலகக் கட்டடமொன்றுக்கான அடிக்கல் நாட்டப்பெற்று, 1980இல் அது கட்டி முடிக்கப்பட்டு ‘டானியல் பூவர் ஞாபகார்த்த நூலகம்” என்ற பெயரும் அக்கட்டடத்துக்கு

சூட்டப்பட்டது. இந்த நூலகக் கட்டடம் திரு. ராஜன் கதிர்காமர் அவர்கள் கல்லூரி அதிபராக இருந்த காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியின் முதலாவது அதிபரும் கல்லூரியின் வளர்ச்சிக்கு அத்திபாரமாக இருந்தவருமான டாக்டர் டானியல் பூவரின் நினைவாக North Eastern hill University of India என்ற இந்தியப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பத்மஸ்ரீ சந்திரன் தேவநேசன் அவர்களால் 31.05.1980 இல் திறந்து வைக்கப்பட்டது.

1826ஆம் ஆண்டு புதிதாக 'Ottley hall" என்ற பெயரில் புதிய கட்டடமொன்று நிறுவப்பட்டபொழுது நூலகத்திற்கென மேல் மாடியில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. அவ்வேளையில் இந்நூலகத்தில் 600 நூல்கள் வரையில் காணப்பட்டன. இதில் அநேகமானவை அமெரிக்க மிஷன் வழங்கிய நூல்களாகும். 1875ஆம் ஆண்டுப் பகுதியில் 4000 நூல்களாக இந்நூற்றொகை வளர்ச்சிகண்டிருந்தது. 1908இல் வண. ஜீ.ஜீ.பிரவுண் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டதன் பின்னர் 1910ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிக்கானதொரு நிறுவனம் 'ஆசிரியர் நிறுவகம்" (Teacher's Institute) என்ற பெயரில் தென்னிந்தியத் திருச்சபையினரால் நிறுவப்பட்டது. இதே காலத்தில் இந்நிறுவகத்தின் செயற்பாட்டுக்கென இக்கல்லூரிக்கு வருகை தந்த அமெரிக்கப் பேராசிரியரான கலாநிதி எச். சி. யோர்க் அவர்கள் கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான நல்ல நூல்களை இந்நூலகத்தில் இணைத்ததுடன் இந்நூலகத்தின் நூல்கள் அனைத்தையும் தூவி தசாம்சப் பகுப்பாக்கத் திட்டத்திற்கு (Dewey Decimal Classification) அமைவாக மீளப் பகுப்பாக்கம் செய்து ஒழுங்குபடுத்தினார். இக்காலத்தில் நூலகத்திற்கென பிரித்தானிய கலைக்களஞ்சியம் தொகுதிகள் (Encyclopedia Britannica) மற்றும் The Historians' History of the World என்ற உசாத்துணை நூல்களின் தொகுதிகள் என்பனவும் வந்து சேர்ந்தன.

## செயற்றிட்ட நோக்கம்

இந் நூலகத்தின் தகவல் வளங்கள் என்பது பெரும் அளவில் காணப்படுவதோடு அவற்றை ஆவணப்படுத்தி பாதுக்காத்தலென்பது இன்றியமையாத ஒரு விடயமாக அமைகிறது. இந்நூலகத்திலுள்ள ஆவணங்களை அவற்றிற்குரிய சரியான பகுப்பு மு8றைகளோடு எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாக அமைகிறது.

## செயற்றிட்ட அடைவுகள்

இதுவரை நூலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் நூல்களை சரியான வகைப்படுத்தல்களோடும் அரிதான ஆவணங்களுக்கு முன்னுரிமை அளித்தும் அனைத்து நூல்களையும் எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் நூலகத்திலுள்ள அனைத்து ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132